1974 ஆகஸ்ட் 12]

மாண்புமிகு திரு. செ. மாதவன்: நேரடியாகவும், கடிதம் மூலமும் சொல்லியிருக்கிறோம். சம்பந்தப்பட்ட அமைச்சரே அதற்கு மேல் ஒதுக்க இயலாது என்று கடிதம் எழுதியிருக்கிறார்.

திரு. முனு ஆதி: தலைவரவர்களே, சைதை வட்டத்தில் பல மனுக்கள் ஆண்டுக்கணக்கில் நின்று கொண்டிருக்கின்றன. அமைச்சர் சொல்கிறார்கள், மாவட்ட ஆட்சித் தலைவர் மூலமாகக் கொடுப்பதற்கு ஏற்பாடு செய்து இருப்பதாக. நான் வேண்டுமானால் சட்ட மன்றத்திற்குக் கொண்டு வந்து காட்டத் தயாராக இருக்கிறேன். பல பேர்கள் காத்துக் கொண்டிருக்கிறார்கள். ஆனால், சிலர் மட்டும் மாதாமாதம் பெறுகிறார்கள். அதை நான் நிரூபிக்கத் தயாராக இருக்கிறேன். சைதாப்பேட்டையில் மனுக்கள் இப்படி காலதாமதம் ஆவதற்கு என்ன காரணம், அதைத் தடுக்க இதுவரையில் எடுத்த நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: மொத்தமாகவே சிமெண்ட் பற்றாக்குறை இருப்பதை ஒப்புக்கொண்டு பதில் சொன்னேன். சைதாப்பேட்டையில் உள்ளவர்கள் செங்கற்பட்டு மாவட்ட ஆட்சித் தலைவரிடத்தில் சென்று வாங்குவது சிரமமாக இருக்கிறது என்று சொன்னார்கள். ஆகவே, புறநகர் பகுதி என்ற முறையில் தொழில் துறை மூலமாகக் கொடுக்கலாம் என்று முடிவு எடுத்து இருக்கிறோம். பற்றாக்குறை இருப்பது உண்மை. எங்காவது தவறு நடந்து இருக்குமானால், சுட்டிக்காட்டினால் நடவடிக்கை எடுக்கப்படும்.

வெள்ள நிவாரண நிதித் திட்டத்தின் கீழ் வேலைகள்

*15 **வினா—திரு. எஸ். கணேசன்:** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தரங்கம்பாடி—மங்கநல்லூர், நல்லாடை—செம்பனார் கோவில் இரண்டு சாலைகளையும் செப்பனிட வெள்ள நிவாரணப் பணியிலிருந்து (Flood Damage works) தனி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: (அ) ஆம்.

(இ) தரங்கம்பாடி—மங்கநல்லூர், நல்லாடை—செம்பனார் கோவில் இரண்டு சாலைகளையும் செப்பனிடுவதற்கு வெள்ள நிவாரண நிதியிலிருந்து தேவையான ஒதுக்கீடு செய்து ஒப்புறுதி அளிக்கப் பட்டுள்ளது. முதற்கண், இந்தச் சாலைகளைச் செப்பனிட ரூ. 3,35,400 பெறுமானத்திற்கு ஒன்பது (9) எஸ்டிமேட்டுகள் வெள்ள நிவாரண கோட்ட தனிப் பொறியாளரால் தயாரிக்கப்பட்டு ஒப்புதல் கேட்கப்பட்டது. எனினும் பின்னர் மேற்கண்ட சாலைகளைச் செப்பனிட ரூ. 3,50,000 பெறுமானத்திற்கு பதிமூன்று எஸ்டிமேட்டுகளாக திருத்தப்பட்டு தஞ்சை மாவட்ட ஆட்சியர் நிர்வாக ஒப்புதல் அளித்துள்ளார். இந்தத் திருத்தப்பட்ட தொகைக்குட்பட்டு செலவை கட்டுப்படுத்தி வேலையை முடித்திட நிபந்தனை விதிக்கப்பட்டுள்ளது.

*16 **வினா—திரு. தி. சி. ஆ. சிவப்பிரகாசம்:** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 17—12—73 ஆம் தேதியன்று மழையினால் பாதிக்கப் பட்ட திருநெல்வேலி மாவட்டம், முக்கூடல் அருகேயுள்ள அண்ணா நகர் மற்றும் அம்பேத்கார் நகர் மக்களுக்கு நிவாரண மளிக்கக் கோரி 18—12—1973-ல் முக்கூடல் நகரப் பஞ்சாயத்துத் தலைவரிடமிருந்து மனு ஏதேனும் பெறப்பட்டதா?

(இ) ஆம் எனில், அதன் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: (அ) ஆம்.

(இ) முக்கூடல் நகரப் பஞ்சாயத்துத் தலைவரின் மனுவின் கோரிக்கைப்படி வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட 58 பேர்களுக்கு, தலா ரூ. 80 வீதம் ரூ. 4,640 நிவாரணமாக வழங்கப்பட்டது. பாதிக்கப்பட்ட மற்ற 7 பேர்கள் வாடகை வீட்டில் வசிப்பவர்கள். ஆதலால் நபருக்கு ரூ. 20 வீதம் 7 பேர்களுக்கு ரூ. 140 உடை உதவி மட்டும் வழங்கப்பட்டது.

TRUTH ALONE TRIUMPHS